Lakeridge Health

மே 1, 2020

அன்பான Durham பிராந்திய நண்பர்களே, அயலவர்களே,




COVID-19 பரவல் எங்கள் சமூகத்தையும் உலகத்தையும் கடந்த இரண்டு மாதங்களாக அலைக்கழித்துக்கொண்டிருக்கும் இந்த நிலையில், இந்த வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கான Durham சமூகத்தின் ஆதரவும் உறுதிப்பாடும் மிகவும் சிறப்பாக உள்ளன.

எங்களின் விட்டுக்கொடுப்புகள் பயனளிக்கின்றன என்பததைச் சான்றுகள் காட்டுகின்றன.

Durham பிராந்தியத்தில், நோய்வாய்ப்படுவோரின் வீதம் குறைந்துகொண்டிருக்கிறது. புதிதாக நோய்வாய்ப்படுவோரின் எண்ணிக்கை உண்மையில், குறைவடைந்து கொண்டிருப்பதை நாங்கள் இப்போது தினமும் பார்க்கிறோம்.

இந்தச் செய்தி நேர்மறையானதாக இருக்கும் அதேவேளையில், நீண்டகாலப் பராமரிப்புக்கான மற்றும் ஓய்வுகாலத்துக்கான இல்லங்களில் அதிக எண்ணிக்கையிலான பரவலைத் தற்போது நாங்கள் பார்க்கிறோம். எனவே, COVID-19ஆல் மிகவும் எளிதில் பாதிக்கப்படுபவர்களைப் பாதுகாப்பதிலும் பராமரிப்பதிலும் தற்போது எங்களின் கவனம்செல்வது சரியே.

இந்த வைரஸைப் பற்றி நாங்கள் தொடர்ந்து அறிந்துகொள்ளும்போது, அதன் பரவல் மோசமாகப் போகாமல் இருப்பதற்கான எதிர்வினைகளை விரைவாக நாங்கள் மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

**நீண்டகாலப் பராமரிப்புக்கான மற்றும் ஓய்வுகாலத்துக்கான இல்லங்களில் வசிப்பவர்களுக்கு உதவுதல்**

கடந்த சில வாரங்களாக, இந்தப் பிராந்தியம் முழுவதிலும் இருக்கும் நீண்டகாலப் பராமரிப்பு மற்றும் ஓய்வுகால இல்லங்களை ஆதரிப்பதற்காக, தனது நிபுணத்துவத்தை சமூகத்தில் Lakeridge Health மேலும் விரிவுபடுத்தியுள்ளது. எங்கள் SWAT குழுச் செவிலியர்கள், தொற்றுநோய் நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் இதுவரை ஒரு டசினுக்கும் மேற்பட்ட இல்லங்களுக்கு உதவியுள்ளனர். மேலும், எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அங்கிருக்கும் வதிவிடவாளர்களுக்கு கவனிப்பு மற்றும் ஆதரவை வழங்குவதற்கான ஊழியர்களுக்கான பற்றாக்குறையை எதிர்கொள்ளும் நீண்டகாலப் பராமரிப்பு இல்லங்களில் தன்னார்வத் தொண்டாற்றியிருக்கின்றார்கள்.

ஏப்ரல் 22 அன்று, Pickeringஇல் இருக்கும் Orchard Villaவில் ஏற்பட்ட COVID-19 திடீர் பரவலைச் சமாளிப்பதில் Lakeridge Health தலைமைப் பங்கெடுத்திருக்கிறது. மருத்துவச் சேவைகளுக்கான VP Leslie Motz, மற்றும் தலைமைச் செவிலியர் இயக்குநர் ஆகியோரின் தலைமையில், மருத்துவ நிபுணர்களுடன் Lakeridge Health ஆரோக்கியக் குழு உறுப்பினர்களின் ஒரு சிறிய குழுவினர், Orchard Villa ஊழியர்கள் மற்றும் சிறப்பு கனேடிய ஆயுதப்படைகளின் குழுக்களுடன் இணைந்து திடீர் பரவல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், வதிவிடவாளர்களுக்கான பராமரிப்பை அதிகரிக்கவும் செயல்பட்டு வருகின்றனர்.

திடீர் பரவலுக்கான காரணங்களை ஆராய்ந்து அதனைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை நாங்கள் அடைந்துள்ளோம். அனைத்து வதிவிடவாளர்களையும் ஊழியர்களையும் பரிசோதித்தல் மற்றும் சில வதிவிடவாளர்களை மீண்டும் பரிசோதித்தல், அந்த இடத்தின் ஒவ்வொரு பகுதியையும் தொற்றுநீக்குவதற்காக முழுமையாகச் சுத்தம்செய்தல், ஒவ்வொரு வதிவிடவாளருக்குமேற்ற தனிப்பயனாக்கப்பட்ட கவனிப்பை வழங்குதல் மற்றும் தொற்றுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை விழிப்புணர்வுடன் பயிற்சிசெய்வதற்குக் குழு உறுப்பினர்களுக்கு ஆதரவுவழங்கல் ஆகியவை இதில் அடங்குகின்றன.

அன்புக்குரியவரைப் பற்றிய தனிப்பட்ட இற்றைப்படுத்தல்களை வழங்குவதற்காக வதிவிடவாளர்கள் ஒவ்வொருவரினதும் முக்கிய தொடர்பாளராக அடையாளம் காணப்பட்ட குடும்ப உறுப்பினர்களுடன் Lakeridge Health's Patient Experience குழு தொடர்புகொண்டுள்ளது. அதேபோல், நேரில் பார்வையிட முடியாதபோதுகூட குடும்பங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட 'மெய்நிகர் வருகைகள்' உள்ளடங்கலான பல புதிய தகவல்தொடர்பு வழிகள் வழங்கப்படுகின்றன.

**எங்கள் மருத்துவமனைகளில் நோயாளர்களைக் கவனித்தல்**

நீண்டகால பராமரிப்புக்கான மற்றும் ஓய்வுகாலத்துக்கான இல்லங்களில் திடீர் பரவல் ஏற்பட்டதால், Lakeridge Healthஇல் COVID-19க்காக மருத்துவமனையில் சேர்க்கப்படல் அதிகரித்து வருகிறது. எங்கள் மருத்துவமனைகள் ஒரு "எழுச்சி நிலைக்கான" தயார் நிலையிலுள்ளன, இந்த நிலை எங்கள் மருத்துவமனைகளில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் சிறந்த பராமரிப்பை வழங்குவதற்கான இடவசதி, ஆரோக்கிய வல்லுநர்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளன என்பதை விரைவாக உறுதிப்படுத்த அனுமதிக்கிறது.

இன்றுவரை, எங்கள் மருத்துவமனைக் குழுக்கள் வழங்கிய சிறந்த பராமரிப்பைத் தொடர்ந்து மீட்சியடைவதற்காக 78 கோவிட் -19 நோயாளர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

COVID-19 கட்டுப்படுத்தப்படும்வரை, எங்கள் சமூகத்தின் அனைத்து பகுதிகளிலும் பார்வையாளர்கள் மீதான கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. நோயாளர்களுக்குச் சாதகமான அனுபவத்தை உருவாக்குவது எங்களுக்கு மிகவும் முக்கியமாகும். இதுவரை, இந்த *மெய்நிகர் இணைப்புத் (Virtual Connections)* திட்டம் iPad ஒன்றுக்கு ஊடாகக் கிட்டத்தட்ட 382 நோயாளர்களை நூற்றுக்கணக்கான குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்களுடன் இணைத்துள்ளது.

நோயாளர்களுக்கும் எங்கள் சமூகத்துக்குமாக நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுவதால், தேசிய **மருத்துவர்கள் தினத்தை**, Lakeridge Healthஇன் 700 மருத்துவர்களுக்கு நன்றி தெரிவிப்பதன் மூலம் குறிக்க நாங்கள் விரும்புகிறோம் - நோயாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கான அவர்களின் நிலையான அர்ப்பணிப்பு முன்பொருபோதும் இல்லாத இந்தக் காலத்தில் இருப்பதைப்போலத் தெளிவாக ஒருபோதும் தெரிந்ததில்லை.

**போராட்டத்தைத் தொடரல்**

வெப்பநிலை அதிகரித்தாலும், பொருளாதாரத்தை மெதுவாக அதிகரிக்கும் திட்டங்களை அரசாங்கம் கருத்திலெடுத்தாலும், எங்கள் பாதுகாப்பை நாங்கள் குறைக்கக்கூடாது. அனைவரையும் தொடர்ந்து பாதுகாப்பாக வைத்திருக்கும் உடல்ரீதியான தூரத்தைப் பேணல், கைகளைக் கழுவுதல் மற்றும் சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்தல் ஆகியவற்றை நாங்கள் தொடரவேண்டும்.

உங்களுக்கு COVID-19 அறிகுறிகள் இருப்பதாக நீங்கள் நினைத்தால், தயவுசெய்து உங்கள் மருத்துவரை அழைப்பதுடன், www.lakeridgehealth.on.caஇல் COVID-19 இணைய மதிப்பீட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

நிறைவாக, தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்கான வழிகளைத் தேடுங்கள் - உங்கள் அயலவர்கள் நலமா இருக்கிறார்களா என விசாரியுங்கள் அல்லது பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உதவுவதற்குத் தன்னார்வத்தொண்டு செய்யுங்கள். COVID-19க்கு எதிரான போராட்டத்திற்கு உதவுவதற்குப் பல பாதுகாப்பான வழிகள் உள்ளன.

எங்கள் சமூகத்தினரையும் ஆரோக்கியப் பாதுகாப்புக் குழுவினரையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான உங்கள் பங்கைச் செய்வதற்கு உங்களுக்கு மீண்டும் எங்களின் நன்றி.

நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதற்கு உங்களை வாழ்த்துகிறோம்,

Susan deRyk
Interim President & CEO

Dr. Tony Stone
Chief of Staff